**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

HMOP 378/2021
பக்கம் 3
PW1 ஜீவா

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய முதல் விசாணையில் சொல்லியுள்ள சங்கதிகளை நான் சொல்லிதான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்துள்ளார். எங்களது திருமணம் எங்களது இருவீட்டின் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணமாகும். நான் உத்திரமேருர் வட்டம் வயலூர் கிராமதை சேர்ந்வர் ஆவேன். எதிர்மனுதாரர் ராவத்தநல்லூர் கிராமத்தை சேர்ந்தவர் ஆவார். திருமணத்தின் போது எதிர்மனுதாரர் சென்னையில் சிசில் இன்ஜினியராக பணிபுரிந்து வந்தார். திருமணமான 9 மாத காலத்தில் எதிர்மனுதாரர் என்னுடைய வீட்டில் வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்ததாக என்னுடைய முதல் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. அதன் பிறகு சென்னை சைதாபேட்டையில் என்னுடைய கணவருடன் கூட்டு குடும்பமாக வசித்து வந்தோம். சைதாபேட்டை விலாசம் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. சைதாபேட்டையில் டாக்டர் அம்பேத்கர் மெட்ரிகுளேசன் பள்ளியில் நான் ஒரு ஆசிரியாக பணிபுரிந்து வந்தேன். இந்த விவரத்தை என்னுடைய முதல் விசாணையில் நான் சொல்லியுள்ளேன். அந்த பள்ளியில் நான் மாத வருமானம் எவ்வளவு ஈட்டி வந்தேன் என்பதனை காட்ட எதாவது ஆவணத்தை என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தற்போது முடியாது. 2010 ம் ஆண்டு எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து என்னை அடித்து துன்புறுத்தியதாக என்னுடைய முதல் விசாணையில் சொல்லியுள்ளது நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா

என்றால் இல்லை. சைதாபேட்டையில் இருந்து வளசரவாக்கத்தில் குடிபெயர்ந்த போது நாராயணி அப்பாட்ஸ்மெண்ட் நாங்கள் குடியிருந்து வந்தோம். அந்த குடியிருப்பிற்கு மாதம் வாடகையாக ருப்பாய் 8,000 மும் வாடகை முன்வைப்பு தொகையாக ருப்பாய் 80,000/– முடிவு செய்யப்பட்து. அந்த பணத்தை எதிர்மனுதாரரின் அண்ணன் தான் கொடுத்தார். இந்த விவரத்தை என்னுடைய முதல் விசாணையில் நான் சொல்லியுள்ளேன். நாங்கள் குடியிருந்து வந்த வீட்டிற்கு எதிர்மனுதாரின் அண்ணன் வாடகை மற்றும் வாடகை முன்வைப்பு தொகை கொடுத்தற்கு என்ன காரணம் என்றால் கூட்டு குடும்பமாக இருந்த காரணத்தினால் அவர் கொடுத்தார். வளசரவாக்கத்தில் எதிர்மனுதாரரின் அண்ணன் மற்றும் குடும்பத்தார் எங்களுடன் குடியிருந்து வரவில்லை. என்னுடைய முதல்வ விசாரணையில் 7ம் பத்தியில் வாடகை முன்வைப்பு தொகை திரும்ப செலுத்துவதற்கு என்னுடைய நகைகளை அடமானம் வைத்து கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு நகை எந்த வங்கியில் அடமானம் வைக்கபடட்டது என்ற விவரத்தை காட்டுவதற்கு எதாவது ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோனா என்றால் இல்லை. அதற்குறிய ஆவணம் எதுவும் இல்லை. ஏனென்றால் நகைகள் அனைத்தும் மீட்க முடியாமல் ஏலத்தில் சென்றுவிட்டது. நான் சொல்வதுபோல் என்னுடைய எந்த ஒரு நகைகளையும் அடமானம் வைக்கவில்லைஎன்றும் எதிர்மனுதாரர் மீதும் அவருடைய அண்ணன் மீதும் குற்றச்சாட்டு வைப்பதற்காக வேண்டி நான் பொய்யாக சங்கதிகளை சொல்கிறேன் என்றால் சரியல்ல. மார்ச் மாதம் 2017 ம் வருடம் எதிர்மனுதாரர் குடித்துவிட்டு என்னை தாக்கியதாக சொல்லப்படுவதற்கு புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. இது தொடர்பாலக இருவீட்டு பெரியவர்கள் யாரும் எங்களை அழைத்து சமாதாம் செய்வில்லை. 2017ம்

ஆண்டு மார்ச்ச மாதம் முதல் நான் எதிர்மனுதாரரை பிரிந்து தான் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். இது நாள் வரையிலம் நான் ஜீவனாம் கோரியும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழகோரியும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தற்போது வயலூர் அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தற்காலிக ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் அந்த பள்ளியில் வேலை பார்த்து வருவதனை காட்ட எதாவது ஆவணத்தை தாக்கல் செய்யமுடியுமா என்றால் தற்போது என்னிடம் எந்த ஒரு ஆவணமும் இல்லை. 2012 ம் ஆண்டு எதிர்மனுதாருக்கு ஒரு சாலை விபத்தில் இருகால்கலும் ஊனமடைந்து விட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அவருக்கு ஊனம் எதுவும் கிடையாது திருமத்திற்கு முன்பே ஒரு வித பூச்சிகடியால் அவ்வாறு ஏற்பட்டு இருந்தது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சக்காக எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/–K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.